**<u>EP.NO.22/2022 PW-1</u>**

நாள் : 06.09.2024

பெயர் : உமாபதி

த/பெ : சின்னகண்ணு

**<u>தீர்ப்பு கடனாளர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அசல் வழக்கு எண். 135/2022 முருகானந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். மேற்கண்ட வழக்கில் வேலுவுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் ஆமாம். மேல்முறையீட்டு வழக்கிலும் முருகானந்தம் ஒரு தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் ஆமாம். இந்த நிறைவேற்று மனுவில் வேலு பெயர் மட்டும் தான் சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். அதன் பிறகு வேலு இறந்துவிட்ட காரணத்தால் அவருடைய வாரிசுதார்களை நிறைவேற்று மனுவில் சேர்ப்பதற்காக தான் முருகானந்தத்தையும் சேர்த்துள்ளீர்கள் என்றால் ஆமாம்.

வேலுவிற்கு எதிராக காவல் நிலையத்தில் புகாரோ வழக்கறிஞர் அறிவிப்போ நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் வேலுவிற்கு எதிராக புகாரோ அல்லது அறிவிப்போ கொடுத்தற்கான ஆதாரம் உள்ளதா என்பதை எதிரி தரப்பு வழக்கறிஞர் வழக்கு ஆவணங்களை காண்பித்து கேட்ட போது சாட்சி நான் கொடுத்திருக்கிறேன் ஆனால் வழக்கு ஆவணங்களில் இல்லை என்று கூறிகிறார். நீதிமன்ற உத்திரவை வேலு மீறிவிட்டார் என்பதை காண்பிப்பதற்கு வேலுவிற்கு அறிவிப்போ, காவல் நிலையத்தில் புகாரோ நீங்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

நிறைவேற்று மனுவானது 16.12.2020 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நிறைவேற்று மனு 22/2022 ல் வேலு நீதிமன்ற உத்திரவை மீறிவிட்டார் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்து தாக்கல் செய்ய சொன்னேன். தாவா சொத்திற்கு அருகில் முருகானந்தம் மனைவி ரேவதி சொத்து வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். ரேவதி என்பவர் உங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் நான் அவ்வாறான அறிவிப்பு எதையும் பெறவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் மருதம்பாக்கம் கிராமத்தில் சர்வே எண் 22/1, 23/3 மற்றும் 22/1 ன் மற்றொரு பகுதியை பெருமாள் என்பவரிடம் இருந்து ரேவதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் ரேவதி அந்த சர்வே எண்ணில் சொத்து வாங்கியிருக்கிறார் ஆனால் பெருமாளிடம் இருந்து கிரயம் வாங்கவில்லை. ரேவதியின் கணவர் தான் முருகானந்தம் என்றால் ஆமாம்.

நிறைவேற்று மனுவில் எந்தெந்த சர்வே எண்களில் எதிர்மனுதாரர்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை நான் சொல்லியிருக்கிறேன். சர்வே எண் 22/2 க்கு தெற்கு பக்கத்தில் சர்வே எண் 50 ல் முருகாந்தம் சொத்து உள்ளது என்றால் இல்லை வேலு பெயரில் தான் உள்ளது. நீங்கள் மனுவில் கூறியுள்ளவாறு பதிக்கப்பட்ட பழுப்பை சேதம் செய்துவிட்டார்கள் என்பதை நிரூபிக்க புகைப்பட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். முருகாந்தம் தான் பழுப்பை சேதம் படுத்தினார் என்பதை நிரூபிக்க அதை பார்த்த கண்ணுற்ற சாட்சி யாரையும் முன்னிலைபடுத்தவில்லை என்றால் காவல் நிலையத்தில் நான் தகவல் சொன்னேன் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள்.

பழுப்பு சேதம் அடைந்தது குறித்தும் அதனால் உங்களுக்கு எவ்வளவு பணம் இழப்பு ஏற்பட்டது என்பதை காண்பிக்க சேத ஆய்வறிக்கை எதையும் வழக்கில் முன்னிலைபடுத்தியுள்ளீர்களா என்றால் ஆமாம். போலீசார் சம்பவ இடத்தை ஆய்வு செய்து உடைந்த பழுப்பு மற்றும் கேபிள் குறித்து குறிப்பு எதுவும் எழுதிகொண்டார்களா அவற்றை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை ஆனால் ஆய்வு செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை தொடர்ச**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.